இந்திய அரசியலமைப்பு

பகுதி - 5

சமூக ஏற்றத்தாழ்வுகள்

1. கைவினைஞர்கள் மற்றும் உடல் உழைப்பு தொடர்பான தொழில்களை மேற்கொள்ளும் தொழிலாளர்கள் --- சூத்திரர்கள், பஞ்சமர்கள்.
2. கல்வி, அரசு வேலைவாய்ப்புகள், சொத்து, வழித்தடங்கள், குளங்கள் போன்ற அடிப்படை உரிமைகள் யாருக்கு மறுக்கப்பட்டது? சூத்திரர்கள், பஞ்சமர்கள்.
3. தமிழகத்தில், சங்க காலத்தில் 'சதுர் வர்ணா' அடிப்படையிலான ஜாதி முறை நடைமுறையில் இல்லை.
4. களப்பிரர்கள் ஆட்சிக்கு பிறகு பல்லவர்கள், பாண்டியர்கள், சோழர்கள் ஆட்சிக்காலத்தில் --- பிராமணர்கள் உயர்நிலையை அடைந்தனர்.
5. 1912 -இல் பிராமணர்களுக்கு அல்லாத மாணவர்களுக்காக 'திராவிட விடுதியை' சென்னையில் நடத்தியவர்? --- சி. நடேச முதலியார்.
6. சமூக அரசியல் இயக்கமான, தென்னிந்திய நல உரிமைகள் சங்கம் "நீதிக்கட்சி" யை உருவாக்கியவர்கள்? --- பி. தியாகராய செட்டி, டாக்டர். டி.எம். நாயர்.
7. பிராமணர்கள் அல்லாதவர்களின் அரசியல் சட்ட பாதுகாப்பை அளித்தது --- நீதிக்கட்சி.
8. இரட்டை ஆட்சி முறையின் படி சென்னை மாகாணத்தை ஆட்சியை கைப்பற்றி 16 ஆண்டுகள் (1921 - 1937) ஆண்ட கட்சி --- நீதிக்கட்சி.

9. நீதிக்கட்சியின் ஆட்சியில், 'வகுப்புரிமை ஆணை' மூலமாக அந்தந்த வகுப்புகளைச் சேர்ந்த பிரிவு மக்களுக்கு அரசு வேலை கிடைக்க வழி வகை செய்தது.
10. எந்த விதிமுறையை நீக்கியதால் பிராமணர் அல்லாதோர் மருத்துவ கல்லூரிகளில் சேர உதவியாய் இருந்தது --- சமஸ்கிருதம் கட்டாயம் என்ற சட்டம் நீக்கப்பட்டது.
11. இந்துக்கோயில்களில் பிராமணர்கள் செலுத்திய ஆதிக்கத்தை தடுத்து நிறுத்தியது எது? இந்து சமய அறநிலைய மசோதா.
12. தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் --- டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி.
13. இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 'பஞ்சமி நில சட்டத்தின் மூலம்' தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு நிலங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன.
14. நிலமற்ற வேலையாட்களின் நிலையை உயர்த்த --- மிராசுதாரர் முறை ஒழிக்கப்பட்டது.
15. இந்தியாவில் முதன் முறையாக பெண்களுக்கு வாக்குரிமை அளித்தது? சென்னை மாகாணத்தில்.
16. நீதிக்கட்சியின் ஆட்சியில், சென்னையில் உள்ள சிந்தாதிரிப்பேட்டை பள்ளியில் ஏழைக் குழந்தைகள் தொடர்ந்து கல்வி கற்பதை ஊக்கப்படுத்துவதற்காக மதிய உணவு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

17. சென்னை மாகாணத்தில் தொழிற்சாலைகளை ஊக்குவிக்கவும் முறைப்படுத்தவும் தொழிற்பேட்டைகளை அறிமுகப்படுத்திய பெருமை --- நீதிக்கட்சியையே சாறும்.

பகுதி - 6

சாதிமுறை

1. மகாத்மா காந்தி உள்ளிட்ட சமாதான அகிம்சைவாதிகள் தீண்டாமையை ஒழிக்க முறப்பட்டனர் ஆனால், அவர்கள் வர்ண முறையை நியாயப்படுத்தினர்.
2. ஆர்ய சமாஜ்யத்தை நிறுவியவர் --- சுவாமி தயானந்த சரஸ்வதி.
3. சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்கள் சாதி முறையை வெறுக்கின்ற அதே வேலையில் வர்ண முறையை நியாயப்படுத்தினார்.
4. தமிழ்நாட்டில் சித்தர், இராமலிங்க வள்ளலார், வைகுந்த சாமி ஆகியோர் சாதி முறையை எதிர்த்தவர்கள்.
5. மஹாராஷ்டிராவில், மஹாத்மா பூலே, சாகு மஹாராஜ் ஆகியோர் சாதி முறையையும் வர்ண முறையையும் எதிர்த்தனர்.
6. கேரளாவில், நாராயண குரு சாதி முறையையும், வர்ண முறையையும் எதிர்த்தார்.
7. தமிழ்நாட்டில், அயோத்திதாச பண்டிதர் சாதி முறையையும், வர்ண முறையையும் எதிர்த்தார்.
8. சென்னை மாகாணத்தில் இரட்டை ஆட்சி, பிராமண அல்லாதவருக்கு சட்டமன்றத்தில் சில இடங்களை ஒதுக்கீடு செய்தது.

9. அரசு பணிகளில் அனைத்து சமூகத்தினருக்கும் விகிதாச்சார முறை அடிப்படையில் முன்னுரிமை அளிக்கும் வகுப்புவாத அரசாணை பிறப்பிக்கப்பட்டது.
10. மாநில அரசுகள் இடஒதுக்கீட்டு கொள்கையை, பின்பற்றுவதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் இந்திய அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகளில் திருத்தம் செய்வதற்காக முதலாவது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தை கொண்டுவந்தார் பண்டித ஜவஹர்லால் நேரு கொண்டுவந்தார்.
11. தமிழ்நாட்டில் நடைமுறையில் உள்ள இடஒதுக்கீடானது மிகவும் மேம்பட்டதாகவும், விரிவானதாகவும் உள்ளது. இதன்படி ஆதிதிராவிடருக்கு 18%, பழங்குடியினருக்கு 1%, மிகவும் பிற்படுத்தப்பட்டவருக்கு 20%, பிற்படுத்தப்பட்டவருக்கு 30% ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் அருந்ததியினருக்கும், பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்களுக்கும் உள்ஒதுக்கீடும் செய்யப்பட்டது.
12. "சாதி முறைக்கு எதிரான தீவிரமான போராளி" --- தந்தை ஈ.வே.ரா பெரியார்.
13. 1924 -ல் கேரளாவில், வைக்கம் எனும் இடத்தில் பஞ்சமர்கள், சூத்திரர்கள் போன்ற தாழ்த்தப்பட்ட மக்கள் பொதுத் தெருவில் நடந்து செல்ல சமமான உரிமையை பெற்றுத்தர போராட்டம் நடைபெற்ற போது பெரியார் அதற்கு தலைமை ஏற்றார்.
14. வ.வே.சு ஐயர் அவர்களால் நடத்தப்பட்டு வந்த 'சேரண்மாதேவி குருகுளத்தில்' வர்ணாசிரம பாகுபாடு நிலவுவதை எதிர்த்தார் பெரியார்.

15. தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் என்ற முறையில் அரசியல் மற்றும் ஆட்சித்துறைகளில் வகுப்புவாத பிரதிநிதித்துவம் கிடைத்திட பாடுபட்டார்.
16. பெரியார் அவர்களின், ‘சுயமரியாதை இயக்கம்’ சூத்திரர்கள், பஞ்சமர்கள் ஆகியோரை சமூகப் பண்பாடு மற்றும் மத அடிமைத் தனத்திலிருந்து விடுவித்தது.
17. பெரியார் அவர்களின், ‘சுயமரியாதை இயக்கத்தின்’ முக்கிய நோக்கம் என்ன? பெண்கள் ஆண்களுக்கு நிகராக சரி நிகர் சமானமாக வேண்டும் என்பதாகும்.
18. பெரியார் சாதிமுறையை எதிர்ப்பதிலும், சாதி மறுப்பு திருமணத்தினை ஊக்குவித்தார்.
19. பெரியார் அவர்கள் புரோகிதம் தவிர்த்த ‘சுய மரியாதை’ திருமணங்களை அறிமுகம் செய்தார்.
20. பெரியார் அவர்கள், ‘குடியரசு’, ‘விடுதலை’, ‘புரட்சி’ போன்ற தமிழ் இதழ்களையும், ‘ரிவோல்ட்’ என்ற ஆங்கில இதழையும் வெளியிட்டு தமது கொள்கைகளை பரப்பினார்.
21. கல்வி நிலையங்களில் சாதி முறையை ஒழித்திடவும், ‘அனைத்து சாதியினரும் அட்சகராகிடும் சட்டத்தை’ பெற அரும்பாடுபட்டவர் --- பெரியார்.
22. பெண்கள் உரிமைகளுக்காக ஈ.வே.ரா போராடிய போராட்டங்கள் அவருக்கு, “பெரியார்” என்ற பட்டத்தை பெற்று தந்தது.

23. 19 ஆம் நூற்றாண்டில் ப்ரிட்டிஷ் அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட 'அரசு நிதியுதவி திட்டம்', கிராமங்களில் அதிகமான பள்ளிகளை ஏற்படுத்தியது.
24. காமராசர் அவர்களின் அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட 'மதிய உணவுத்திடம்', எம்.ஜி.ஆர் அவர்களின் ஆட்சியில் 'சத்துணவு திட்டமாக' மேம்பாடு அடைந்தது.
25. தீண்டத் தகாதவர்களை காந்தியடிகள், இந்துக்களாக அங்கீகரித்து, "ஹரிஜன்" என பெயர் சூட்டினார்.
26. "ஹரிஜன்" என்பதன் பொருள் 'கடவுளின் குழந்தைகள்'.
27. காந்தியடிகள் "ஹரிஜன்" என்ற இதழை நடத்தி ஹரிஜன் இன மக்களுக்கான நலத்திட்டங்களை காங்கிரஸ் கட்சிக்குள் கொண்டுவந்தார்.
28. தமிழகத்தில் அயோத்திதாச பண்டிதர், புத்த மதத்தை தழுவுவதற்கு ஆதரவாக தனது கருத்துக்களை தெரிவித்தார்.
29. 1938 -ஆம் ஆண்டு இராஜாஜி அவர்களின் தலைமையில் அமைந்த காங்கிரஸ் அமைச்சரவை ஹரிஜன்கள் கோவிலுக்குள் நுழைந்திட 'கோவில் நுழைவு சட்டங்களை' கொண்டுவந்தது.
30. மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் தாழ்த்தப்பட்டவர்கள் நுழையும் உரிமையை பெற பாடுபட்டவர்கள் --- மதுரை வைத்தியநாத ஐயர், முத்துராமலிங்கத் தேவர்.
31. 2006 ஆம் ஆண்டு 'தமிழ்நாடு அர்ச்சகர் சட்டம்', பிராமணர்கள் அல்லாதோர் குறிப்பாக சூத்திரர்கள், பஞ்சமர்கள் போன்றோர் கோவில்களில் அர்ச்சகர்களாக ஆவதற்கு வழிவகை செய்கிறது.

32. குழந்தை தொழிலாளர்கள் பற்றிய குழுவின் அறிக்கை 1976 - 1979 சமர்பிக்கப்பட்டது.
33. 1948 ஆம் ஆண்டு 'பண்ணை தொழில் சட்டம் கொண்டுவரப்பட்டது'.
34. 1950 ஆம் ஆண்டு, 'மோட்டார் போக்குவரத்து தொழிளாளர் சட்டம் கொண்டுவரப்பட்டது.
35. 1938 ஆம் ஆண்டு 'குழந்தை தொழிலாளர் சட்டம் கொண்டுவரப்பட்டது'.
36. இந்தியாவில் அமைப்புச்சாரா பணியாளர்களில் 39.7% பேர் வறுமை கோட்டிற்கு கீழ் வாழ்கின்றனர்.
37. 1970 ஆம் ஆண்டில் 'TRANSGENDER' என்ற சொல் பரவலாக கையாளப்பட்டது.
38. 1980 ஆம் ஆண்டு, ஆண், பெண் என இருபாலினத்திலும் வராத மனிதர்களை குறிக்கும் சொல்லாக 'TRANSGENDER' அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.
39. 'TRANSGENDER' என்பதற்கு தமிழில் மூன்றாம் பாலினத்வர் அல்லது திருநங்கைகள் என அழைக்கப்படுகின்றனர்.
40. திருநங்கைகளை (TRANSGENDER) மூன்றாம் பாலினித்தவர்களாக அங்கீகரித்து அவர்களுக்கு குடும்ப அட்டைகளை வழங்கிய முதல் மாநிலம் --- தமிழ்நாடு.
41. கடவுச்சீட்டு பெறும் விண்ணப்பங்களில் ஆண் / பெண் / மூன்றாம் பாலினத்தவர் என குறிப்பிடும் வசதி செய்யப்பட்டுள்ளது.

42. உலகிலேயே முதல் முறையாக திருநங்கைகளுக்கென பிரத்யோக திருமணத் தகவல் மின்வலை (Website) துவங்கப்பட்ட இடம் --- சென்னை (www.thirunangai.net).
43. திருநங்கை.நெட் என்பது தமிழ்மொழி பேசும் திருநங்கைகளுக்கான திருமணத் தகவல் மின்வலையாகும்.
44. ‘திருநங்கைகள்’ என்பவர்கள் முழுமையான பெண்களாக இல்லாவிட்டாலும் மனதாலும், உணர்வாலும் பெண்களாக கருதிக்கொள்பவராவர்.
45. இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழ்நாட்டில் திருநங்கைகளுக்கு மறுவாழ்வு அளிக்க முன்மாதிரி குடியிருப்பு மையங்களை கடலூரில் அமைக்க கடலூர் மாவட்ட நிர்வாகம் முடிவெடுத்துள்ளது.
46. இந்தியாவில் திருநங்கைகளுக்கு, அதிகாரப்பூர்வ அந்தஸ்தினை வழங்கியுள்ள ஒரே மாநிலம் --- தமிழ்நாடு.
47. திருநங்கைகளுக்கு மறுவாழ்வு அளிக்க முன்மாதிரி குடியிருப்பு மையங்கள் அமைத்து அவர்களுக்கான நல ஆணையம் அமைத்து அவர்களுக்கு நலத்திட்டங்களை வழங்கிட உள்ள இடங்கள் யாவை? கடலூர், பண்ருட்டி, சிதம்பரம்.
48. திருநங்கைகளுக்குகான மறுவாழ்வு திட்டத்திற்காக கடலூரில் 2 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ஒவ்வொரு திருநங்கைக்கும் தலா 3 சென்ட் வீட்டு மனையும், அதில் 308 சதுர அடியில் வீடுகள் கட்டிக்கொள்ள கடன் உதவியும் தரப்பட உள்ளன.

49. அரசு கல்லூரிகளில் திருநங்கைகள் பயில அரசாணைகள் தமிழக அரசால் கொண்டுவரப்பட்டுள்ளன (இந்தியாவிலேயே முதல் முறையாக).

50. திருநங்கைகளுக்கான வேலை வாய்ப்பினை உயர்த்திட தமிழக அரசின் சார்பில் கணினி பயிற்சிகள் அளிக்க முன்வந்துள்ளது.